# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 1258/2016

ஆணை எண். 0017/2017

நாள் : 07/02/2017

09.12.2016 நாளிட்ட தினமலர் நாளிதழ் செய்தி – தாமாக முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

மண்டல அலுவலர்,
மண்டலம் – 15,
சென்னை மாநகராட்சி.
சென்னை – 119.
– எதிர் மனுதாரர்

சென்னை பதிப்பு, தினமலர் நாளிதழில், "சமுதாய நலக்கூடத்தில் மண்டல வருவாய் அலுவலகம்" என்ற தலைப்பில் 09.12.2016 அன்று வெளியிடப்பட்ட செய்தி, 1258/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட செய்தி சம்பந்தமாக சோழிங்கநல்லூர் மண்டல அலுவலரின் அறிக்கை பெற்று பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை பதிப்பு, தினமலர் நாளிதழில், "சமுதாய நலக்கூடத்தில் மண்டல வருவாய் அலுவலகம்" என்ற தலைப்பில் 09.12.2016 அன்று செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியில், சோழிங்கநல்லூர் பேரூராட்சியாக இருந்தபோது இராஜீவ் காந்தி சாலையில், காஞ்சிபுரம் மாவட்ட அனைத்து அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் 2010–11 ஆம் நிதியாண்டில் சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டு செயல்பாட்டுக்கு வந்தது என்றும், சென்னை மாநகராட்சியாக விரிவாக்கம் செய்யப்பட்டபின்பு மேற்குறிப்பிட்ட சமுதாய நலக்கூடத்தில் சோழிங்கநல்லூர் மண்டல அலுவலகம் செயல்படுவதால் பொதுமக்கள் அதிருப்தியில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், பொதுமக்கள் தனியார் மண்டபங்களுக்கு அதிகளவில் செலவு செய்ய முடியவில்லை எனவும், மாநகராட்சி அதிகாரிகளிடமிருந்து மேற்குறிப்பிட்ட சமுதாய நலக்கூடத்தை மீட்டுத்தர உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2. மேற்படி தினமலர் செய்தி குறித்து விரிவான அறிக்கை இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை முறையீட்டு மனு எண். 1258/2016, நாள் 02.01.2017 மூலம் கோரப்பட்டு, சோழிங்கநல்லூர் மண்டல அலுவலரிடமிருந்து மேற்படி அறிக்கை, ம.அ. 15 ந.க.எண்.பி2/0054/2017, நாள் 19.01.2017 மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டது. மேற்படி அறிக்கையில், சோழிங்கநல்லூர் பகுதி, சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதியில் இணைந்த பின்பு சோழிங்கநல்லூர் பேரூராட்சி அலுவலகம் இயங்கிவந்த அலுவலகக் கட்டிடத்திலேயே தற்போதைய சோழிங்கநல்லூர் மண்டல அலுவலகம் இயங்கிவருகிறது என்றும், 109 பணியாளர்கள் பணியாற்றும் இம்மண்டல அலுவலகத்தில் போதுமான இடவசதி இல்லாததாலும், வேறு கட்டிட வசதி இல்லாததாலும் அருகில் உள்ள சமுதாய நலக் கூடத்தில் மண்டல அலுவலகத்தின் ஒரு பகுதி செயல்பட வேண்டிய அவசியமாயிற்று என்றும் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். தற்போதைய மண்டல அலுவலகக் கட்டிடத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், கட்டிடம் விரிவாக்கம் செய்யப்பட்ட பின்பு, மண்டல அலுவலகத்தின் ஒரு பகுதியாக செயல்பட்டுவரும் சமுதாயநலக் கூடம் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் எனவும் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார்.

3. பொதுமக்களின் பயன்பாட்டிற்கான சமுதாயக்கூடத்தை அலுவலகப் பயன்பாட்டிற்காக மாநகராட்சியே பயன்படுத்துவது முறையாகாது. புதிதாக விரிவாக்கம் செய்யப்படவுள்ள மண்டல அலுவலகத்தின் பணியை விரைந்து முடித்து, சமுதாய நலக்கூடத்தில் செயல்பட்டுவரும் வருவாய்த் துறை அலுவலகத்தை இடமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்வதுடன், சமுதாயக்கூடத்தை புதுப்பொலிவுடன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டுவர உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் சோழிங்கநல்லூர் மண்டல அலுவலரை அறிவுறுத்தி அவ்வாறே, இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 7– ஆம் நாள், என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை–600 032

27/2/2017

செயலாளர்.

23.2.17

23/2/17

பெறுநர்

மண்டல அலுவலர்,
சோழிங்கநல்லூர் மண்டலம்(மண்டலம்–15),
சென்னை மாநகராட்சி,
எண்.120, இராஜீவ் காந்தி சாலை,
சோழிங்கநல்லூர், சென்னை – 119.